[1975 மார்ச் 24

திரு. ஓய். வெங்கடேஸ்வர தீக்ஷிதர்: தலைவர் அவர்களே, ஏராளமாக மாரியம்மன் கோவிலிலிருந்து வருமானம் வந்துகொண்டிருக்கிறது. அன்பில் மாரியம்மன் கோவில் இல்லை, சமயபுரம் மாரியம்மன் கோவிலிலிருந்து ஏராளமான பணம் வந்துகொண்டிருக்கிறது. அந்த வருமானத்தை ஸ்ரீரங்கம் கோவிலோடு இணைத்துச் செலவு செய்து கொண்டிருக்கிறார்கள். அந்த ஸ்ரீரங்கம் கோவிலுக்கு யாத்திரீகர்கள் கிட்டத்தட்ட காஷ்மீரிலிருந்தும், நேபாளத்திலிருந்தும், எல்லா மாநிலங்களிலிருந்தும் வந்து போய்க்கொண்டிருக்கிறார்கள். அவர்கள் தனித் தனியாகத் தங்குவதற்கு இதுவரை எந்தவிதமான ஏற்பாடுகளாவது சர்க்கார் செய்திருக்கிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: தலைவர் அவர்களே, அந்த ரங்கநாதரே ஒய்வு எடுத்துக்கொண்டிருப்பதால், வருகிறவர்கள் ஓய்வு எடுத்துக் கொள்ளத் தேவையில்லை.

திரு. ஓய். வெங்கடேஸ்வர தீக்ஷிதர்: தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்களுக்கு ஒரு விளக்கம் சொல்லுகிறேன். ரங்கநாதர் எப்பொழுதும் ஓய்வு எடுத்தது இல்லை. சயனத்திலிருந்து மக்களுடைய நல்வாழ்விற்காக அனுகிரகித்துக்கொண்டிருக்கிறார் என்பதைச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு மேலவைத் தலைவர்: பாட்டிலே 'பள்ளி கொள்ளும்' என்று தான் இருக்கிறது. 'திருவரங்கத்தரவணையில் பள்ளி கொள்ளும் மாலோனைக் கண்டு இன்பக் கல்வியெய்தி வல்வினையேன் என்று கொலோ வாழும் நாளே' என்று இருக்கிறது.

வினாக்கள்—விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு.—ஓர் உரையின் தொடக்கத்தில் இடப்பட்டிருக்கும் உடுக் குறி (*) அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பட்டது என்பதைக் குறிக்கும்.]

2. கவன ஈர்ப்பு.

நியாய விலையில் அரிசி கிடைக்காமையால் மதிய உணவு மையங்களை நடத்த முடியாத நிலைமை ஏற்பட்டிருப்பது குறித்து.

திரு. ஜி. சுவாமிநாதன்: தலைவர் அவர்களே, கீழ்க்கண்ட அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த பொருளைக் குறித்து மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்:—

"தமிழ்நாட்டில் உள்ள மதிய உணவு மையங்களுக்கு நியாய விலையில் அரிசி கிடைக்காமையால் மதிய உணவு மையங்கள் நடத்த முடியாத நிலைமை ஏற்பட்டு அங்குள்ள குழந்தைகள் பாதிக்கப்படுவதைக் குறித்து."

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: தலைவர் அவர்களே, தொடக்கப் பள்ளிகளிலும் உயர் தொடக்கப் பள்ளிகளிலும் 1 முதல் 8 வகுப்புகளில் பயிலும் ஏறத்தாழ 19·58 இலட்சம் மாணவர்களுக்கு நண்பகல் உணவு வழங்கப்படுகிறது. (அரிசன நலத்துறை நடத்தி வரும் பள்ளிகளில் பயிலும் சுமார் 1·60 இலட்சம் மாணவரும் இவ்வெண்ணிக்கையில் அடங்குவர்.) 1975—76-ம் ஆண்டில் நண்பகல் உணவுத் திட்டத்திற்காக பள்ளிக் கல்வித்துறை ஏறத்தாழ நாலரைக் கோடி ரூபாய் செலவிடும். இத்துடன் அமெரிக்க 'கேர்' நிறுவனமும் ஆண்டு ஒன்றுக்கு ரூபாய் 6 கோடி பெறுமானமுள்ள உணவுப் பொருட்களை இத்திட்டத்திற்கு இலவசமாக உதவி வருகிறது. ஆண்டில் 200 நாட்களுக்கு ஒரு மாணவனுக்கு ஒரு நாளைக்கு ஆறு காசு வீதம் வழங்கப்பட்டு வந்த உதவித் தொகை 1—10—74 முதல் பத்து காசாகவும் உள்ளாட்சி நிறுவனங்கள் வழங்க வேண்டிய பங்குத் தொகை நான்கு காசிலிருந்து ஐந்து காசாகவும் உயர்த்தப்பட்டுள்ளது. 'கேர்' தரும் இலவச உணவு ஆண்டுக்கு 100 நாட்களுக்குப் போதும். மீதி 100 நாட்களுக்குத் தேவையான அரிசி முதலிய உணவுப் பொருள்களை வாங்குவதற்கும், 200 நாட்களுக்குமே தேவையான விறகு, காய்கறி, சமையல் செலவு போன்றவற்றுக்கும் அரசு மானியத்தையும் உள்ளாட்சி மன்றப் பங்குத் தொகையையும் பயன்படுத்திக் கொள்ளவேண்டும்.

பள்ளிக் கல்வித் துறையின் பொறுப்பில் உணவளிக்கப்படும் சுமார் 18 லட்சம் பேரில் செங்கற்பட்டு, வடஆற்காடு, தென்னாற்காடு மாவட்டங்களில் சுமார் 3.75 லட்சம் பேருக்கு 97 மைய சமையற் கூடங்களில் உணவு சமைத்து வழங்கப்படுகிறது. மைய சமையற் கூடப் பகுதிகளிலும் சரி, பிற பகுதிகளிலும் சரி, நியாய விலையில் அரிசி கிடைக்க அரசு ஏற்கனவே நடவடிக்கை எடுத்துள்ளது. நண்பகல் உணவைத் தாமே சமைத்துப் போடும் தொடக்கப்பள்ளிகளுக்கும் மைய சமையற் கூடங்களுக்கும் தேவையான அளவு அரிசியை உணவுப் பொருள் பங்கீட்டுத் துறை மூலம் வழங்கிய அந்தந்த மாவட்ட ஆட்சியாளர்கள் நடவடிக்கை எடுத்துள்ளனர். எந்தப் பகுதியிலாவது நண்பகல் உணவுத் திட்டத்திற்குத் தேவையான அரிசி கிடைப்பதில் இடர்ப்பாடு இருக்குமாயின் அதனை பள்ளிக் கல்வித் துறைக்கும் உணவுப் பொருள் பங்கீட்டுத் துறைக்கும் தெரிவித்தால் அவர்கள் தக்க நடவடிக்கை எடுப்பார்கள். அரிசி நியாய விலையில் கிடைக்கவில்லை என்று எந்த மதிய மையத்திடமிருந்தும் முறையீடுகள் இதுவரையில் இல்லை.

THIRU G. SWAMINATHAN: Mr. Chairman, Sir, I have given notice of an adjournment motion.

MR. CHAIRMAN: It will be taken up tomorrow. I think the hon. Member has come to a compromise with the Hon. Minister that it could be taken up tomorrow or the day after.

THIRU G. SWAMINATHAN: Sir, I would like it to be taken up tomorrow itself.

MR. CHAIRMAN: Yes, it will be taken up tomorrow.